21st April 1959]

Headquarters Hospital, Madurai

* 58 Q.—Sri V. SUBBIAH : கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா— 2-00 p.m.

(அ) மதுரை சர்க்கார் தலைமை ஆஸ்பத்திரியில் உயர்தர மருந்துகள் வெளியே எடுத்துச் செல்லப்பட்டு குறைந்த விலையில் விற்கப்படுவது பற்றி இதுவரை எத்தனை கேஸ்கள் கண்டுபிடிக்கப் பட்டன ?

(ஆ) இவற்றைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (a) None, Sir.

(b) Does not arise.

Sri V. SUBBIAH : மதுரை ஆஸ்பத்திரியில் இருந்து உயர்தர மருந்துகளையெல்லாம் வெளியில் எடுத்துச்செல்லப்பட்டு 16 ரூபாய் பெருமானம் உள்ள மருந்துகள் 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அதைத் தடுக்க ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

Mr. SPEAKER : கனம் அமைச்சரிடம் தனியாக விசாரித்துக் கொள்ளவும்.

Government aid to the Industries conducted by Sri G. D. Naidu

* 59 Q.—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any help or aid is given to any of the industries organised or conducted by Sri G. D. Naidu of Coimbatore; and

(b) if so, what are the industries and what is the nature of help given?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) & (b) So far no help or aid has been given by Government to any of the industries organised or conducted by Sri G. D. Naidu. But loans under State Aid to Industries Act have been given to the following concerns at Coimbatore for which Sri Naidu was reported to be a technical adviser :—

(1) Coimbatore Armature Winding Works.

(2) U.M.S. Radio Factory, Coimbatore.

(3) D' Engineering, Private, Limited, Coimbatore.

(4) U.M.S. Blade Factory, Coimbatore.

(5) India Radiators, Coimbatore.

The Coimbatore Armature Winding Works has been given a loan of Rs. 39,000, the other three concerns have been given a loan of rupees one lakh each. All loans were for purchase of machinery.

[21st April 1959

SRI J. MATHA GOWDER : ஜி. டி. நாயுடு அவர்களுக்கு ரேடியோ செய்ய லோன் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அவர் செய்கிற ரேடியோ உபயோககரமாக இருக்கிறதா? இதுவரை எவ்வளவு விநியோகம் ஆகியிருக்கிறது?

THE HON. SRI R. VENKATARAMAN : அந்த ரேடியோ ரொம்ப நன்றாக இருப்பதாக அபிப்பிராயம் சொல்லப்படுகிறது. அதைச் சர்க்கார் கூட வாங்கியிருக்கிறார்கள்.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த ஒவ்வொரு தொழில் துறையும் லாபகரமாக நடந்து வருகிறதா? என்ன சதமானம் லாபம் வருகிறது?

THE HON. SRI R. VENKATARAMAN : "ஸ்டேட் எய்டு டு இன்டஸ்ட்ரீஸ் ஆக்ட்" பிரகாரம் கடன் கொடுக்கிற காரணத்தால் அந்தந்தக் கம்பெனிகள் லாப நஷ்டக்கணக்கு பூராவும் பார்ப்ப தில்லை. தனியார் துறையில் செய்கிற வேலை இது. கொடுத்த கடனுக்குச் சரியாக பாதுகாப்பு இருக்கிறதா என்பதைப் பார்த்துக் கடன் கொடுக்கப்படுகிறது.

SRI P. G. KARUTHIRUMAN : நண்பர் ஜி. டி. நாயுடு அவர் களுக்கு திடீரென்று சில சாமான்களை உடைக்கிற வழக்கம் உண்டென்பது சர்க்காருக்குத் தெரியுமா? இந்த மாதிரி ரேடியோக் களை உடைக்காமல் இருக்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா?

MR. SPEAKER : இந்தக் கேள்வி இதில் வராது.

THE HON. SRI R. VENKATARAMAN : Since it has been put I shall answer the question, Sir. அவர் ரேடியோக்களை உடைத்தால் கூட ரொம்பக்கெட்டிக்காரர். நான் அவருடைய பாக்டரியைப் பார்த்திருக்கிறேன். பலவிதமான நூதனமான இயந்திரங்களை யெல்லாம் அவரே செய்யக்கூடிய நிலைமையில் இருக்கிறார். இப்பொழுது கடன் கொடுக்கப்பட்டிருக்கிற தொழில்கள் எல்லாம் மிகவும் நன்றாக, திறமையாக நடத்தப்படுகின்றன.

SRI A. VEDARATHNAM : அவர் ஆலோசகராக இருந்து நடத்தும் தொழில்களுக்கு மட்டும் உதவி அளிக்கப்படுகிறதா? அல்லது அவர் நேரடியாகச் செய்யும் தொழில்களுக்குக் உதவி அளிக்கப்படுகிறதா? அவர் உதவி கோரினால் அளிக்கப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : தனிக் கேள்வி போட வேண்டும். அவர் உதவி கோரினாரா இல்லையா என்பது தெரியாது. நேரடியாக நடத்தும் தொழில்களுக்குக் கடன் கொடுக்கப்பட வில்லை.

SRIMATHI T. N. ANANDANAYAKI : குறைந்த விலையில் தயாரிக் கப்படும் சிறந்த ரேடியோக்களைப் ப்ளாக் ஏரியாக்களில் உபயோகப் படுத்தப்படுகிறதா? அப்படி இல்லையென்றால் அதற்குக் காரணம் என்ன? இனிமேலாவது உபயோகிக்கப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : A separate question may be put.

SRI N. R. THIAGARAJAN : ஜி. டி. நாயுடு அவர்கள் மத்திய சர்க்காருக்கு 56 லட்சம் ரூபாய் இன்கம் டாக்ஸ் பாக்கியைக் கொடுத்து விட்டார்களா?

21st April 1959]

MR. SPEAKER : நான் அப்பொழுதே சொன்னேன். இந்தக் கேள்விக்குச் சம்பந்தமான உப கேள்வியைத் தயவு செய்து கேட்க வேண்டும். இந்த உப கேள்வி "அவுட் ஆப் ஆர்டர்". அதுவும் ஒரு ஆளைப்பற்றி இந்தச் சபையில் குறை கூறுவது சரியாகாது.

Starting of Industries in Tirunelveli District

* 60 Q.—SRI T. VELUCHAMI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி ஜில்லாவில் ஹரிஜன நல இலாகா மானியத்தின் உதவியால் செங்கல் ஆலை, தீப்பெட்டித் தொழிற் சாலை, சிமிண்டு சாமான்கள் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்காகத் திட்டம் எந்த நிலைமையிலிருக்கிறது?

(ஆ) எங்கெந்த இடங்களில் எங்கெந்தத் தொழிற்சாலை எப்போது ஆரம்பிக்க உத்தேசம்?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) A cottage Industrial Co-operative Society for the manufacture of table moulded bricks is proposed to be organised shortly at Valanad in Tirunelveli district. Proposals for starting other Small Scale Industries are still under investigation by the Industries Department.

SRI T. VELUCHAMI : நெல்லை ஜில்லாவில் ஹரிஜனங்களும், பின் தங்கிய வகுப்பினர்களும் பெருவாரியாக இருக்கும் பகுதி சங்கரன்கோயிலில் உள்ள பழங்கோட்டை நீலதநல்லூர் பகுதி. இந்தப் பகுதியில் அவர்களுக்கு வேலை கொடுக்கப்படவேண்டியது மிகவும் அவசியம். அங்கு வேலை வாய்ப்புகள் இல்லை. அடிக்கடி பஞ்சமும் ஏற்படுகிறது. அங்கு இவர்களுக்கு வேலை கொடுக்க தொழிற்சாலைகளைத் துவங்க சர்க்கர் ஸ்பெஷலாக நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் சொல்லுகிற தாலூகாவில் தொழிற்சாலை ஆரம்பிப்பது பரிசீலனையில் இருக்கிறது. இந்த வள நாட்டில் மத்திய சர்க்கார் கொடுத்த ஒரு லட்சம் ரூபாயைக்கொண்டு செங்கல் தொழிற்சாலை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சங்கரன்கோயிலிலும் தொழிற் சாலை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்படும்.

SRI G. GOMATHISANKARA DIKSHITAR : சிலோனில் இருந்து திரும்பிய ஹரிஜனங்களுக்காகத் தோல் பதனிடும் சாலை ஏற்படுத்த அரசாங்கம் கவனம் செலுத்துமா?

THE HON. SRI R. VENKATARAMAN : கூட்டுறவு முறையில் ஒரு தோல் பதனிடும் தொழிற்சாலையை ஏற்படுத்தவேண்டுமென்று அந்த ஹரிஜனங்கள் விண்ணப்பித்தால் அரசாங்கம் அது பற்றிப் பரிசீலனை செய்யும்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : சுடர் என்ற மாச் பாக்டரி நஷ்டத்தில் ஓடுவதாகச் சொல்லுகிறார்கள். அதே போல் நஷ்டத்தில் ஓடுகிற தொழிலை ஆரம்பிக்கப்போகிறார்களா?

THE HON. SRI P. KAKKAN : இந்தக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லை.

SRI K. VINAYAKAM : ஹரிஜன இலாகா மூலமாக நடத்தப் படுகிற இந்தச் சிறிய தொழில்கள் ஹரிஜனங்கள் கேட்டால் மாத்திரந்தான் கொடுக்கப்படுகிறதா? அதே மாதிரி பிற்பட்ட இனத்தவர்களுக்கு ஹரிஜன இலாகா மூலமாக இத்தகைய உதவி தர அரசாங்கம் முன் வருமா?